பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 14 வெள்ளிக்கிழமை (30-08-1991) UTHAYAN — A Livaly National Tamil Daily கதிர்: 269

### தெற்கில் பெரும் அரசியல் நெருக்கடி

# பிரேமாவை நீக்க பிரேரணை; ஆளும் கட்சி பிளவுபடுகிறது!

## லலித் உட்பட 2 அமைச்சர்கள் தமது பதவிகளை ராஜினாமா

கொழும்பு, ஆகஸ்ட் 30

ஆளும் ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த எம். பிக்களில் கணிசமான ஒரு பகுதியினர் எதிர்க்கட்சி எம். பிக்களுடன் சேர்ந்து ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவை பதவி நீக்கக் கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்திருப்பதை அடுத்து, தென் இலங்கையில் பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் அமைச்சரவையில் இருந்து மூத்த அமைச்சர்களுள் ஒருவரான லலித் அத்துலத்முதலியும், தொழில் அமைச்சரான பிரேமச்சந்திராவும் ராஜினமாச் செய்ததை அடுத்து ஆளும் கட்சிக்குள் பிரேமாவுக்கு எதிர்ப்பு வலுவடைந்திருக்கிறது.

திரு. பிரேமதாஸா பல்வேறு குற்றங்களைப் புரிந்துள்ளார் என்றும்— அதற்காக அவரை ஜனாதிபதி பதவியிலிருந்து நீக்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாஸாவுக்கு எதிராக ஐ.தே. காவில் 45 எம். பிக்கள்

கொழும்பு, ஆக. 30

ஜனாதிபதிக்கு எதிரான பிரேரணையை நாடாளுமன்றில் விவாதிக்க கோரி சபாநாயகரிடம். சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் 122 எம். பிக்கள் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

கையெழுத்திட்டுள்ள எம். பிக்களில் ஆகக்குறைந்தது 45 பேர் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 225. அவற்றில் ஈழவர் ஜனநாயக முன்னணியின் 11 உறுப்பினர்களும். ஐக்கிய சோஷலிஸ முன்னணியின் ஓர் உறுப்பினரும் பதவியில் இல்லை.

இப்போது பதவியில் இருக்கும் 213 உறுப்பினர்களில் 125 பேர் ஆளும் ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவர்கள். 88 பேர் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் ஆவர்.

பிரேமாவுக்கு எதிரான பிரேரணை நிறைவேறுவதாயின் அதற்கு நாடாளுமன்றின் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அவதூறுகளைச் சுமக்க பிரேமதாஸா தயாராம்!

கொழும்பு, ஆக. 30

"என்னைப் பொறுத்தவரை நான் எந்தவித தவறையும் செய்யவில்லை. நீங்கள் என்னை அவமானப்படுத்த முயற்சித்தால் அதற்காக நான் கவலைப்படவில்லை. நான் எந்தவிதமான அவதூறையும் சுமக்கத் தயாராக இருக்கிறேன்''.

ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், முதலமைச்சர்கள், அமைச்சுக்கள் மற்றும் துணை அமைச்சுக்களின் செயலாளர்கள், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்ட மாநாட்டில் ஜனாதிபதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமாவுக்கு அமைச்சரவை முழு ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு, ஆக. 30

ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணை பற்றி அமைச்சரவை கடந்த புதன்கிழமை இரவு விவாதித்தது.

முடிவில், ஜனாதிபதி பிரேமதாஸா மீதும் அவரது நிர்வாகத்தின் மீதும் பூரண ஆதரவு தெரிவித்து அமைச்சரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

நாட்டின் பல பிரச்சினைகளை ஜனாதிபதி பிரேமதாஸா ஏற்கனவே தீர்த்து வைத்திருப்பதால் அவரைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு காரணமேயில்லை என்றும் அமைச்சரவை கருத்துத் தெரிவித்தது. (உ-எ)

### முப்படைகளும் பிரேமாவுக்கு ஆதரவு

கொழும்பு, ஆக. 20

அரசமைப்பு உறுதியாகப் பின்பற்றப்படும் என்று முப்படைத் தளபதிகளும் பொலிஸ் மா அதிபரும் அரசாங்கத்திற்கு உறுதியளித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நா[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நுணுக்கமான விவரங்களுடன் 12 பக்கங்களில் குற்றச்சாட்டுகள்

கொழும்பு, ஆக. 30

ஜனாதிபதியை பதவி நீக்க்கோரும் பிரேரணையில் திரு. பிரேமதாஸவுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தப் பிரேரணையின் முழு விவரமும் வெளியிடப்படாதபோதிலும் அதில்—

திரு. பிரேமதாஸ இராஜத்துரோகி; லஞ்சப் பேர்வழி; அரசமைப்புச் சட்டத்தை மீறிச் செயற்பட்டவர்; கொலைகாரர்; ஊழல்களில் ஈடுபட்டவர்; அரசியல் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தியவர்; இனப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணத் தவறியவர்- என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன.

தமக்கு நெருங்கியவர்களுக்குத் தவறான முறையில் அதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு கவிழும்?

கொழும்பு, ஆக. 30

பிரேமாவுக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றத்தில் மூன்றில் இருபங்கினால் நிறைவேற்றப்படத் தவறினாலும் இந்தப் பிரேரணையால் அரசுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக அரை வாசிக்கும் மேற்பட்ட எம். பிமார் கைபெழுத்திட்டிருப்பதால் அவர்களினால் பிரேமாவை பதவியிறக்கச் செய்ய முடியாது போனாலும்—

தற்போதைய அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக்கொண்டு வந்து அரசைக் கவிழ்க்க முடியும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (உ)

## நாடாளுமன்றை பிரேமா இப்போது கலைக்கமுடியாது

கொழும்பு, ஆக. 30

ஜனாதிபதி பிரேமதாஸா தமக்கு எதிரான பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலுக்கு உத்தரவிட நினைத்தாலும் அதனை அவர் செய்ய முடியாது.

அரசமைப்புச் சட்டம் அதற்கான தடையை அவருக்கு விதித்திருக்கிறது.

ஜனாதிபதிக்கு எதிராகச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கும் பிரேரணையை சபாநாயகர் ஏற்று நிகழ்ச்சி நிரலில் அதனைச் சேர்த்துக் கொண்டால்—

அந்தப் பிரேரணை குறித்து இறுதி முடிவு எடுக்கும் வரை ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது என்று அரசமைப்பின் 70 (இ) பிரிவு திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. [உ]

## ஜனாதிபதியை நீக்குவதற்கு அரசமைப்பிலுள்ள பிரிவுகள்

கொழும்பு, ஆக. 30

ஜனாதிபதி ஒருவர் மீது குற்றம் சுமத்தி, அக்காரணத்துக்காக அவரைப் பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பான ஏற்பாடுகள் ஸ்ரீலங்கா அரசமைப்பின் 38(1)உ மற்றும் 38 (2) அ, ஆ, இ, ஈ, உ ஆகிய ஷரத்துக்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அதன்படி —

(i) ஜனாதிபதி மனப்பலவீனம் அல்லது உடற்பலவீனம் காரணமாக தமது டணிகளை நிறைவேற்ற முடியாதுள்ளார் என்று; அல்லது

(ii) அரசமைப்பை மீறினார்; தேசத்துரோகம் புரிந்தார்; இலஞ்சம் பெற்றார்; அதிகாரத் துஷ்பிரயோகம், துர்நடத்தை, ஊழல் ஏதேனும் ஒன்றில் ஈடுபட்டார்; சட்டத்தினால் ஒழுக்கக்கேடு எனக் கருதப்படும் ஒரு தவறைப் புரிந்தார் என்று கூறப்படும் ஒரு குற்றத்தைச் செய்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் - திருமலையில் 13 படையினர் பலி!

கொழும்பு, ஆக. 30

மன்னாரிலும். திருகோணமலையிலும் விடுதலைப் புலிகள் நடத்திய வெவ்வேறு தாக்குதல்களில் 13 படையினர் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இதனை ஊர்ஜிதம் செய்தன.

மன்னாரில் வங்காலையில் இருந்து தள்ளாடிக்கு நேராந்து சென்றுகொண்டிருந்த இராணுவ வாகன அணி ஒன்றின் மீதான தாக்குதலில் 9 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஒரு சிப்பாய் தப்பி ஓடிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய கிளேமோர் தாக்குதலில் இராணுவ லொறி ஒன்று சிக்கிச் சிதறியது. அப்போது அந்த லொறியில் பயணம் செய்த நான்கு படையினர் கொல்லப்பட்டனர். [இ-எ]

## நிபந்தனையற்ற பேச்சுக்கு ஐரோப்பிய நாடுகள் முயற்சி

### விடுதலைப் புலிகள் தரப்பு வரவேற்கிறது

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் நிபந்தனை அற்ற முறையில் பேச்சுவார்த்தை நடைபெற ஐரோப்பிய நாடுகள் [illegible] முயற்சியை விடுதலைப் புலிகள் வரவேற்பார்கள்.

விடுதலைப் புலிகள் பேச்சாளர் அன்ரன் ராஜா லண்டனில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய சமாதான முயற்சியில் விடுதலைப் புலிகளும் சேர்ந்து செயற்பட முயற்சிப்பார்கள் என்றும்—

ஐரோப்பிய சமாதான முயற்சியைக் குழப்ப புலிகளுக்கு எதிரான சக்திகள் முயற்சிக்கின்றன என்றும் அவர்கூறினார். [இ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

எலுமிச்சை, மா போன்ற நாற்றுக்கள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப்பேணிகள் மற்றும் ஜாம் போத்தல்கள், ஜாம் போத்தல் மூடிகள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங்கம். கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-0390]

## மணமகள் தேவை

யாழ். இந்து, 29 வயது நிரம்பிய டென்மார்க்கில் நிரந்தர தொழில் புரியும் மணமகனுக்கு குற்றமற்ற, படித்த, அழகான மணமகள் தேவை. நட்சத்திரம்: அத்தம். டென்மார்க்கில் வசிப்பவர்களும், டென்மார்க் செல்ல விரும்புபவர்களும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: யூனியன் பேக்கரி, கண்டி வீதி, சாவகச்சேரி. (17976)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகாலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4818)

## விண்ணப்பப்படிவம்

கல்லூரி ஆசிரியர்களுக்கான Incentive Allowance விண்ணப்பப் படிவங்கள் விற்பனைக்குண்டு. படிவம் ஒன்று ரூபா 2.50. அருண் அச்சகம், 2 ஆம் ஒழுங்கை, (ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமை) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/0430)

## ஆண்டு - 5 (புலமைப் பரிசில்)

புலமைப் பரிசில் அனுமதிப் பரீட்சைக்கேற்ப மாதிரி வினாத்தாள்கள் மாதந்தோறும் 1ஆம், 3ஆம் வாரங்களில், ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியிடப்படும். வினாத்தாள்களைப் பெற்று விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (17973)

## ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
By- BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 09 - 91
காலை 10-00 மணி
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-0425)

## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 19 - 04 - 1986

ஆண்டவன் சொத்தாக: 31 - 07 - 1991

### செல்வன் கிருஷ்ணராசா றஜீவ்

சுந்தரத் தமிழே தேனே சுந்தர றஜீவே- எம்மை
அந்தர நிலையில் விட்டு அன்றதேன கூறிடாயோ!
சின்ன வயதினிலே சிறப்பாகக் கதைகள் பல
சொன்ன மழலைமொழி தொடராகக் கேட்குதடா
நடந்து சென்ற காலடியை நாளெல்லாம் எமது கண்கள்
உணர்ந்து இங்கு தேடுதையா ஓடித்தான் வாராயோ!
கல்லான கோடடையிலே கண்மணியே உனது குரல்
எந்நாளும் கேட்குதடா! எங்கள் றஜீவ் வந்திடையா
ஆறென்றால் ஆறிடுமோ அன்பு றஜீவ் உன் பிரிவு
மாறென்றால் மறந்திடுமோ மருக்கொழுந்தே உனது முகம்
ஆண்டு பல சென்றாலும் ஆறாது உன் பிரிவு
ஆறாமல் அழுகின்றோம் அம்மாவும், அப்பாவும்
ஆறுமுகன் தாள் சேர்ந்து வாழ்ந்திடு நீ எப்போதும்,

உனது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
அப்பம்மா, அம்மம்மா,
உற்றார், உறவினர்கள்.

சிவன் கோவிலடி,
சித்தன்கேணி.
(சி-0400)

## 16 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் ச. ஏகாம்பரநாதன்

[நாயன்மார்கட்டு, பிரபல முறிவு - நெரிவு வைத்தியர்]

மறைவு: 15 - 08 - 1991

தந்தையே! உங்கள் இறுதிச்சடங்கில் கலந்து, உங்களை இறுதியாக பார்க்கும் வாய்ப்பினை காலத்தின் கொடுமையால் இழந்த பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகிய சுலோஜனாதேவி, Dr. ஸ்ரீஜெயதேவி, Dr. சந்திரோதயம் [மன்னார்], வசந்தராணி, Dr. குசராஜன் [கொழும்பு], ஜெயந்தி [U.K], மருமக்கள்: யோகநாதன் [கொழும்பு], பஞ்சலிங்கம் [சட்டத்தரணி], Dr. அரசக்கோன் [மன்னார்], கனகநாயகம் [சவூதி], பரமேஸ்வரி [கொழும்பு], ஆனந்தகுமார் [U.K], பேரப்பிள்ளைகள்: சிறிரஞ்சனி, பாலசுப்பிரமணியம் [கொழும்பு], அஜிலன் [U.K], சயந்தினி, துஷ்யந்தினி, ராகுலன், பகீரதி, விஜயரதி, பிரதீபன், ஞானதீபன், ஜெயரதி, சிவரூபன், யாமினி [U.K]. பூட்டப்பிள்ளைகள்: மனோசன், ஷியாமி, சஞ்சே ஆகிய அனைவரும் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்து எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

டாக்டர்: திருமதி ஸ்ரீஜெயதேவி பஞ்சலிங்கம் [மகள்]

179, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(17893)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 23 - 04 - 1913

மறைவு: 31 - 07 - 1991

### அமரர் வீ. எம். கணபதிப்பிள்ளை

[V.M.K. உரிமையாளர்]

உறுதிகள் நிறைபப் பெற்றே
ஒளிவிளக்கான ஐயா!
பெறுமதி அறிந்த ஓயாப்
பேருழைப் பென்றினாலே
நிறுவிய மேன்மையின் கீழ்
எமையெலாம் நிறைத்து வைத்தெம்
பொறுமையைச் சோதித் தெங்கே
போயினீர் ஐயா! ஐயா!!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து
தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.
(17969)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 19-01-1961

உதிர்வு: 09-09-1990

திதி: 30-08-1991

### செல்வி பொன்னுத்துரை வத்சலாதேவி B.Sc.

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்த அன்புச் செல்வமே வத்சலா! விமானக் குண்டுக்கு நீ பலியாகி ஓராண்டு சென்றும் உந்தன் இனிய தோற்றமும், செயல்களும் எங்கள் நெஞ்சில் நின்று நிழல்படம் போல் காட்சி கொடுக்கின்றதே.

உந்தன் ஆத்ம சாந்திக்காக எங்கள் குலதெய்வமான விநாயகப் பெருமானை என்றும் வேண்டிவருகின்றோம்.

குடும்பத்தினர்.

பொற்பதி, வேலணை
(17897)

SPOKEN ENGLISH
BY
கந்தையா நவரேந்திரன்
ஆரம்பம்:- 4 - 9 - 1991 9-00 மணி
School Of
Business Administration
16, 3 ஆவது குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-0428)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 - 05 - 1960

மறைவு: 11 - 09 - 1990

### திருமதி மாலினி நாகேஸ்வரன்

(ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

திதி: 30-8-1991

நீ மறைந்து ஓராண்டு ஓடிவிட்டது - நின் பசுமை நிறைந்த நினைவுகள் எங்கள் நெஞ்சில் நிழலாடுகின்றன. உமது பிரிவுத் துன்பம் எம்நெஞ்சை வேதனை அடையச் செய்கின்றது. உமது ஆத்மா சாந்தியடைக!

உமது பிரிவால் வாடும்;
கணவன், பிள்ளைகள், பெற்றோர்,
சகோதர, சகோதரிகள், மாமன்,
மாமியர் மற்றும் உறவினர்கள்,
நண்பர்கள்.

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.
[4271]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 7-1-1931

உதிர்வு: 31-8-1988

அமரர்

### கணபதி தியாகேசு

(காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபன முதயவூழியரும், மின்னியற்பகுதி உயர் உத்தியோகத்தரும்)

எம் உயிருக்கு மேலான அன்புத்தந்தையே! வருடங்கள் மூன்றாகி விட்டன. ஆனாலும் உங்களின் பிரிவென்னும் துயர்தனில் இருந்து நாங்கள் இன்றும் மறக்க முடியாமல் அலை மோதிக் கொண்டிருக்கின்றோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

இமையாணன்,
ஆதியாமலை,
உடுப்பிட்டி.
(17971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தெற்கில் எரிமலை!

ஜனாதிபதி பிரேமதாசாவைப் பதவி நீக்கம் செய்யக் கோரும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர்களில் 122 பேர் சபாநாயகரிடம் கையளித்துள்ளனர் — என்ற செய்தி நேற்றுக் கொழும்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அரசியல் பதற்ற நிலையையும் நெருக்கடியையும் உண்டாக்கியது.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஆளுங்கட்சியான ஐ. தே. கட்சியும், எதிர்க்கட்சியான ஸ்ரீ. ல. சு. கட்சியும் சேர்ந்து உழைக்க முன்வந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட இருக்கும் வேளை இது.

ஸ்ரீ. ல. சு. கட்சிக்கு அம்மா-சிறிமா தலைமை வகிப்பதா அல்லது மகன் அனுரா தலைமை வகிப்பதா அல்லது மகள் சுனேத்திரா வந்து சேருவாரா என்று உள்வீட்டுக் கலகம் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் தருணம் இது.

அரசியல் காற்று முழுக்க முழுக்க அரசாங்கத்துக்கு — அரசாங்கக் கட்சிக்குச் சார்பாகவே வீசிக்கொண்டிருக்கும் வேளையில்—

ஆளுங்கட்சி எந்தவித தளம்பலோ, நடுக்கமோ, ஆட்டமோ இல்லாதது போல, காய்ச்சி உறைந்த இரும்புபோல வெளியிலே காட்சிதந்த சமயத்தில்—

ஜனாதிபதி பிரேமதாசாவின் தலைமைத்துவத்தை ஏற்று, அவருக்கு விசுவாசமாகக் கட்சி உறுப்பினர்கள் பணிபுரிகிறார்கள் என்றும், அவர் மீது பெரு மதிப்பும், நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள் என்றும் கருதப்படும் வேளையில் —

ஜனாதிபதி குற்றம் இழைத்ததால் அவரைப் பதவியில் இருந்து நீக்குமாறு நாடாளுமன்றத்தில் பிரேரணை (Impeachment motion) கொண்டுவர அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பது —

ஆளும் கட்சி உறுப்பினர்களும் அதில் ஒப்பமிட்டிருப்பது—

திடீரென வெடித்த பெரும் அரசியல் எரிமலையாகும்!

ஒரு நாட்டின் தலைவர் மீது, இப்படியான வெட்கத்துக்குரிய அவதூறான ஒரு நடவடிக்கை முன்வைக்கப்பட்டிருப்பது இலங்கையின் அரசியல் சரித்திரத்திலேயே இதுவே முதற் தடவை.

அதுமட்டுமன்றி, நாட்டின் தலைவரை, நாடாளுமன்றமே குற்றஞ்சாட்டி விசாரிக்கக் கோரும் இந்த நடவடிக்கை மிகவும் பாரதூரமானதாகும்.

அமைச்சரவையினர் பிரேமதாச மீது முழு நம்பிக்கை தெரிவிக்கலாம். ஆனால் அவர் அரசியலில் சந்தேக நபர் [Accused] என்ற கறுத்தப் புள்ளி குத்தப்பட்ட பின்னர், அவரை பதவியில் இருத்த விரும்புவது போக்கிரித்தனமாகும்.

பதவி நீக்கக்கோரும் பிரேரணை தோல்வி காணலாம். ஆனால், நாட்டின் தலைவர் பதவிக்கு அவமானம் வந்த பின்னர் அவர் அதில் ஒட்டிக் கொண்டிருக்க விரும்புவது அல்லது அதற்கேற்ற விதத்தில் சரிப்படுத்த முயல்வது அரசியல் கனவான் தனம் அற்றதாகும்.

எது எப்படியெனினும், ஐ. தே. கட்சியில் வெடிப்பு ஏற்பட்டுவிட்டது. அது இனி எந்த வேளையும் பூகம்பமாகப் பிளந்துபோகலாம். அதேபோல தென்னிலங்கை அரசியல் முழுவதுமே ஆட்டம் காண்பதற்கும், அரசியல் கலகம் உண்டாவதற்குமான அறிகுறி தோன்றிவிட்டது.

தெற்கில் சிலவேளை, சனநாயகம் செத்து இராணுவ அதிகாரம் ஆட்சிக் கோலைக் கையில் ஏந்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

## பிரேமதாஸாவுக்கு எதிராக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேவை.

இது தொடர்பாக—

அரசமைப்பில் உள்ள ஏற்பாடுகளில் "நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழு எண்ணிக்கையில் (சமுகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இருபங்கினர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

"சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட" என்று கூறப்படுவதால் இந்த எண்ணிக்கை, நாடாளுமன்றின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையான இருநூற்றிஇருபத்தியைந்தையா அல்லது தற்போது பதவியில் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையான இருநூற்றிபதின்மூன்றையா குறிப்பிடும் என்று தெளிவுபடுத்தப்படவில்லை:

### 60 பேரின் ஆதரவு தேவை

எப்படியாயினும் —

எதிரணியில் உள்ள 88 எம். பிக்களுடன் சேர்ந்து ஐம்பது முதல் அறுபது ஆளும் கட்சி எம். பிக்கள் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தாலேயே ஜனாதிபதி பிரேமதாஸாவைப் பதவி நீக்கம் செய்ய முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே ஆளும் கட்சியைச் சேர்ந்த சுமார் ஐம்பது உறுப்பினர்கள் திரு. பிரேமதாஸாவுக்கு எதிராக வாக்களிக்கத் தயாராக இருப்பதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இதனால் ஜனாதிபதி பிரேமதாஸா பதவியிழக்கும் சாத்தியக்கூறு தென்படுவதாக செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

பிரேமாவுக்கு எதிரான மனுவில் கையெழுத்திட்டுள்ள எம். பிக்கள், குறைந்த பட்சம் ஜனாதிபதியின் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் கூடும். அப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டால் ஜனாதிபதி தவிர அமைச்சர்கள் அனைவரும் பதவியிழக்கும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்று அரசியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால் எது எப்படியாயினும் நாடாளுமன்றத்தில் ஆளும் ஐ. தே. கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் இல்லை என்பது தெளிவாகிவிட்டதாக லிபரல் கட்சித் தலைவர் திரு. சாணக்க அமரதுங்க கூறியுள்ளார்.

பிரேமாவுக்கு எதிரான பிரேரணையில் அமைச்சர் ஒருவரும் கையொப்பம் இட்டிருப்பதைத் தாம் பார்த்ததாக அவர் மேலும் சொன்னார்.

சுதந்திரக் கட்சியில் நிலவும் உட்கட்சிப் பூசலையும் தலைமைத்துவப்போரையும் மறைக்கவே அக்கட்சி ஜனாதிபதிக்கு எதிரான இந்த நடவடிக்கையில் இறங்கியிருப்பதாக அரசுப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' குற்றஞ்சாட்டியுள்ளது. (உ-எ)

## ஆனையிறவு ஊடாக போக்குவரத்தாம்

யாழ்ப்பாணம், ஆக. 30

கிளிநொச்சியில் இருந்து ஆனையிறவு ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

—நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இராணுவத்தைச் சேர்ந்த கேர்ணல்சரத்முனசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார். [இ-எ]

## வினாத்தாள் வரவில்லை

யாழ்ப்பாணம், ஆக. 30

நாளை நடைபெற உள்ள ஆங்கில உதவி ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை வினாத்தாள்கள் இன்னும் வந்து சேரவில்லை என்று யாழ். கல்வி அலுவலக அதிகாரி நேற்றுத் தெரிவித்தார். [இ-3]

## பிரேமாவை நீக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும் என்றும் கோரும் பிரேரணையை பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே முன்நின்று கொண்டு வந்திருக்கிறது.

இந்தப் பிரேரணையில் ஆளும் ஐ. தே. கட்சியைச் சேர்ந்த 45 இற்கும் அதிகமான எம். பிக்கள் கையொப்பமிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் அரைவாசிக்கும் மேற்பட்ட எம். பிக்களினால் ஒப்பமிடப்பட்டு, தம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணையை விவாதத்துக்கு ஏற்றுக்கொள்ள நாடாளுமன்ற சபாநாயகர் ஜனாப். எம். எச். முகம்மது இணங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலியும், தொழில் அமைச்சர் பிரேமச்சந்திராவும் தமது அமைச்சரவைப் பதவிகளை இராஜினாமாச் செய்திருக்கிறார்கள் என்ற தகவலை இந்திய வானொலி நேற்றிரவு வெளியிட்டது.

## நுணுக்கமான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காரங்கள், பதவிகள் வழங்கியவர்; தொலைபேசிகளை ஒற்றுக் கேட்கச் செய்தவர் என்பது உட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் நுணுக்கமான விவரங்களுடன் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பன்னிரண்டு பக்கங்களைக் கொண்ட இந்தக் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் திரு. பிரேமதாஸா 1989 இல் பதவிக்கு வந்தது முதல் செய்ததாகக் கூறப்படும் தவறுகள், ஊழல்கள், குற்றங்கள் பற்றி தெளிவாக விபரிக்கப்பட்டிருக்கிறதாம்! (உ-எ-5)

நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

பகைவென்று நகைகொள்வான்

விண்ணேறு 'ஹெலி பொம்பர்' விளையாடி வந்தாலும்
மண்ணேறி யடியார்கள் மனமென்ற வனமாடிப்
புண்ணேறு நெஞ்சுளார் பகைவென்று நகைகொண்டு
கண்ணேறு மழகிலே கந்தனருள் தருவான்.

தென்றலது விளையாடுந் தென்னைமர அன்னையவள்
இன்னுயிரைப் பேணிப் 'பங்கருக்கே' யணியாக்கும்
இன்தமிழர் வாழ்கின்ற இப்பதியில் இக்கொடுமை
வன்கதிர்முன் மென்பனிபோல் விலக்கிடுவாய்
வேலவனே.

—உடுவில் அரவிந்தன்.

## நல்லை ஆதீனத்தின் வெள்ளிவிழா நாளை

யாழ்ப்பாணம், ஆக. 30

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம் நிறுவப்பட்டு நாளை சனிக்கிழமை இருபத்தைந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

ஆதீனத்தின் பீடாரோஹன வெள்ளி விழாவை நாளை சிறப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெள்ளி விழாவை முன்னிட்டு நாளை காலை 9 மணிக்கு விசேட பீடா அபிஷேகமும், காலை 11 மணிக்கு கொலுப் பூசையும் இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து ஆதீனத்தின் சமயப் பணிகளின் வளர்ச்சி குறித்துப் பலரும் வாழ்த்துரை வழங்குவார்கள். பின்னர் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பி. ப. 3 மணிக்கு திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து பண்ணிசை மற்றும் கதாப்பிரசங்கங்கள் நடைபெறும்.

## 350 புளொட் உறுப்பினர் நாடு திரும்புவர்

சென்னை, ஆக. 30

தமிழ்நாட்டில் தங்கியுள்ள சுமார் 350 புளொட் இயக்கத்தினர் இலங்கைக்குத் திரும்பிச் செல்வது என்று முடிவு செய்துள்ளனர்.

இலங்கை அரசுடன் சுமுக உறவுவைத்துள்ள இவர்கள் தாயகம் திரும்பிச்செல்லவோ, அங்கு மறுவாழ்வுக்கான உதவிகளைப் பெறவோ எந்தவித தடையும் இருக்காது என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

## ஜனாதிபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளார் என்று —

ஜனாதிபதி மீது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படலாம்.

அத்தகைய அறிவித்தலில் குற்றம் பற்றிய விவரங்களும் அதனை உயர்நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று கோரப்படுதலும் இடம்பெற வேண்டும்.

### எப்போது சேர்க்கலாம்

இத்தகைய அறிவித்தல் தொடர்பான பிரேரணையில் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரு பகுதியினர் கையொப்பமிட்டால் அதனை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கலாம்.

அல்லது —

அரைவாசி உறுப்பினர்கள் மட்டும் கையொப்பமிட்ட நிலையில், குறிப்பிடப்பட்ட குற்றங்கள் விசாரணை செய்யப்படத் தகுதியுடையவை எனச் சபாநாயகர் கருதினால் அதனை நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளலாம்.

பிரேரணை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டதும் அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சபையில் மூன்றில் இரு பகுதியினர் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தால், பிரேரணையில் ஜனாதிபதிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்துமாறு சபாநாயகர் உயர் நீதிமன்றத்திடம் கோருவார்.

### தீர்ப்பும் வாக்களிப்பும்

உயர்நீதிமன்றம் தன் விசாரணையின் பின்—

ஜனாதிபதி உள அல்லது உடற் குறைபாடு காரணமாக செயற்பட முடியாதவராக உள்ளார்; அல்லது குறிப்பிடப்பட்ட குற்றங்களில் ஒன்றைப் புரிந்துள்ளார் என நீதிமன்றம் கருதுவதாக சபைக்கு அறிவித்தால் —

அந்த அறிக்கை குறித்து சபையில் வாக்கெடுப்பு நடைபெறும். உயர்நீதிமன்றின் அத்தகைய அறிக்கைக்கு சார்பாக நாடாளுமன்றின் முழு உறுப்பினர்களின் மூன்றில் இரு பகுதியினர் வாக்களிப்பதன் மூலம் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

— இவையே ஜனாதிபதி மீது குற்றம் சுமத்தி அவரைப் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பாக அரசமைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ஆகும். (உ)

## மணலாறில் குண்டுவீச்சு

மணலாறு, கொக்கிளாய், நாயாறுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானங்கள் தொடர்ந்து குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்திவருவதால் மக்கள் பெரும் அளவில் இடம் பெயர்ந்து வருகின்றனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அவ்ரோ விமானங்களும் பொம்மர்களும் மாறி மாறித் தாக்குதல் நடத்தி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-5]

## அவதூறுகளை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று உரையாற்றினார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரேரணையில் யார் யார் கையெழுத்திட்டனர் என்பது பற்றி நான் இதுவரை அறியவில்லை. ஆயினும் பல்வேறு வதந்திகள் உலாவுகின்றன. அவசரப்பட்டு நாம் எந்த ஒரு முடிவுக்கும் வரவேண்டியதில்லை.

நாடாளுமன்றம் கலைக்கப்படக் கூடாது என்பதற்காகவே இப்பிரேரணையில் தாம் கையெழுத்திட்டதாக சில எம்பிக்கள் தொலைபேசி மூலம் என்னிடம் தெரிவித்தார்கள்.

பிரேரணையில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பது மறைக்கப்பட்டு தம்மிடம் கையெழுத்து வாங்கப்பட்டதாக கூறி, ஓர் எம். பி. என்னை நேரில் சந்திக்க வந்தார்.

பிரதமரே நாடாளுமன்றத்தின் தலைவராகவும் செயற்படுவதால் அவரைப் போய்ச் சந்தியுங்கள் என்று கூறி அந்த எம். பியை திருப்பி அனுப்பிவிட்டேன்.

அதிகாரத்தைக் கைப்பற்ற எதிர்க் கட்சிகள் செயற்படுவது இயல்பானது; இப்படியான சந்தர்ப்பங்களில் கட்சிக்குள் உள்ள அதிருப்தியாளர்களும் பயன்படுத்தப் படுகிறார்கள் — என்றார்.

வடக்கு—கிழக்கு பிரச்சினை குறித்து அவர் கூறியதாவது:-

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினேன். அதற்காக சிலர் என் மீது குற்றம் சுமத்தினார்கள். நான் பதவி ஏற்ற பின் இனப் பிரச்சினையைத் தீர்க்க எதுவுமே செய்யவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்கள். இனப் பிரச்சினையைத் தீர்க்க சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது. தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆகவே பிரச்சினையைத் தீர்க்க இந்த அரசு எதையுமே செய்யவில்லை என்று கூற முடியாது.

எனக்கு எதிரான பிரேரணை தொடர்பாக அரசமைப்புக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பிரேரணை தற்போதைய நிர்வாக அமைப்பைக்குழப்பி விடக் கூடாது என்பதற்கே இந்த மாநாட்டைக்கூட்டி விளக்கம் அளித்தேன். — என்றார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிடங்கள்

நிதர்சனம் நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

[1] தகவல் சேகரிப்பாளர்கள்
[2] தகவல் அலுவலர்கள்
[3] செய்தியாளர்கள்
[4] நிகழ்ச்சி மதிப்பீட்டாளர்கள்
[5] அறிவிப்பாளர்கள்
[6] விளம்பரம் சேகரிப்பாளர்கள்

அனுபவம், திறமை என்பவற்றிற்கேற்ப தகுந்த வேதனம் வழங்கப்படும்.

சுயவிவரங்களுடன் 1991-9-5 இற்கு முன் தொடர்பு கொள்க.

'நிதர்சனம்', திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: மேலதிக விவரங்களை நிதர்சனம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(17977)

## பாரதிதாசன்
### கல்வி நிறுவனம்
(BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 92** கலை, வர்த்தகம்

★ புதிய பிரிவு ★

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. வரதராஜன் |
| வர்த்தகம்: | பிரபல விரிவுரையாளர் |
| அளவையியல்: | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல்: | திரு. மரியதாஸ் |
| | திரு. யோகராஜா |
| | திரு. சௌந்தி |
| தமிழ்: | திருமதி மீரா |
| இந்துநாகரீகம்: | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல்: | திரு. ஜோசப் |

**ஆரம்பம்: 01 - 09 - 1991**
ஞாயிறு 8.00 a.m.

### பொருளியல் - புதிய பிரிவு

பொருளியல் பகுதி II - வரவுசெலவுத்திட்டம்
பொருளியல் பகுதி I - தேசிய வருமானம்

[0419]

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
1928 - 10 - 24

மறைவு:
1990 - 09 - 09

திதி:
30 - 08 - 1991

### அமரர் மயில்வாகனம் ஆறுமுகம்

உயிர் தந்து, உதிரம் தந்து எம்மை உயர்வாக்கி விட்ட எங்கள் குடும்பத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

''அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை - இருள் சூழ்ந்த இன்னா உலகம் புகல்.''

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வேலணை மேற்கு,
வேலணை - 8.

[17974]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 - 08 - 1991 இல் வெளியிடப்பட்டது.

## உற்சவகால நிகழ்ச்சிகள்

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இசை மற்றும் சமய அரங்குகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும் நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ ஆலய முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் — சங்கீத பூஷணம் கே. ஆர். நடராஜாவின் இன்னிசைக்கச்சேரி.

★ கம்பன் கோட்டத்தில் — செல்வி பரமேஸ்வரி கணேசன், திரு. வீ. கே. நடராஜா ஆகியோரின் இசைக்கச்சேரிகள்.

★ நல்லூர் ஆதினம் குருமூர்த்தி ஆலயத்தில் — திரு. ந. சிவசண்சமுகமூர்த்தி நிகழ்த்தும் ''கந்தரனுபூதி'' கதாப்பிரசங்கம்.

★ நல்லூர் மேற்கு வீதி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் — கானகதாவாரிதி வை. நித்தியானந்தசர்மா நடத்தும் இராமாயணத் தொடர் விரிவுரையில் ''மாய மான்''.

(அ-126)

### முப்படை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்துவதற்கும், சட்டம்-ஒழுங்கை பராமரிப்பதற்கும் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு முப்படைகளும் பொலீஸாரும் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர்கள் அரசுக்கு உறுதியளித்துள்ளனர்.

## நாளை ஆரம்பம்

**PHYSICS**
திரு. சௌந்தி
B. Sc. (Hons)
★ Electricity ★
— 3-15 p.m.

**ZOOLOGY**
திரு. ஈஸ்வரதாசன்
B. Sc. [Cey.]
★ முளையவியல் ★
— 4-15 p.m

**PURE/APP.**
திரு. குணசிங்கம்
B. Sc. [Hons]
★ Paper Class ★
12-00 p.m.
★ சுருறுப்பு விரிவு ★
10-00 a.m.
★ உராய்வு ★
11-00 a.m.

**CHEMISTRY**
செல்வா
B. Sc. [Hons]
★ சேதன இரசாயனம் ★
2-00 p.m.

**BOTANY**
★ தாவர உடலமைப்பு ★
10 30 a.m.

Personal,
New Science, Centre,
Elilakam Front Lane,
Jaffna.

(சி/0420)

## மரண அறிவித்தல்
### கதிரித்தம்பி ஜெயரஞ்சனா

இல 13, நல்லூர் 2ஆம்குறுக்குவீதியைச் சேர்ந்த ஜெயரஞ்சனா 29-8-91 இல் காலமானார். அன்னார் கதிரித்தம்பி (ஓய்வு பெற்ற ஆசிரியர்] சிவயோகம் தம்பதிகளின் அன்பு மகளும், நிஷாதாவின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-8-91 இன்று பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
வ. கதிரித்தம்பி

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
### கல்வியாண்டு 1991/1992

(பல்கலைக்கழக வசதிகள் அனைத்தும் கொண்ட அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்)

கலை முதற் தேர்வு — G. A. Q.
வணிக முதற் தேர்வு — ISt. in Com.

ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள்
01-09-1991 முதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

Registrar,
COLLEGE OF HIGHER STUDIES,
ANAIPANTHY.

மு. குறிப்பு:
1 பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகளிற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த யாழ். விரிவுரையாளர்களும், யாழ். விக்னா கல்வி நிலைய விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

[சி-0408]

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

யாழ். பல்கலைக்கழகம் / பேராதனை

கல்வியாண்டு 1991 / 1992
கலை முதற் தேர்வு G. A. Q.
வர்த்தக முதற் தேர்வு I St IN COM.

G. S Q. ஆகிய பாடநெறிகளுக்கான பதிவுகளை 10 - 9 - 1991 இற்கு முன் பதிவு செய்துகொள்ளவும்.

A/L இல் 3 பாடங்கள் சித்தி எய்தியவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விரிவுரைகள் யாவும் ஆரம்பம்:
14 - 9 - 1991

விவரங்களுக்கு; நிர்வாகி.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(0416)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா தன்மாவரதர்

(இளைப்பாறிய அநுராதபுரம் புகையிரதக் கட்டுப்பாட்டு நிலைய பிரதம கட்டுப்பாட்டு அதிகாரி)

கைதடி வடக்கைச் சேர்ந்த தன்மாவரதர் 27 - 08 - 1991 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னையா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், பாலச்சந்திரன் (கணக்காளர் லங்கெம் லிமிட்டெட்), பாலகுமாரன் (கணக்காளர் துரைராஜா அசோசியந் பிறைவேற் லிமிட்டெட்), பாலதயாளன் [தொழில் நுட்பவியலாளர் ரூபவாஹினி கூட்டுத்தாபனம்), பாலராஜன் (அமெரிக்கா), சீதாலக்ஷ்மி பாலேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சகுந்தலாதேவி, சுலோஜனா ஆகியோரின் மாமனாரும், சுதர்சன், ஜெனனி ஆகியோரின் பேரனாருமாவார்.

தகவல்:
த. பாலகுமாரன்
(மகன்)

சீதாபதி,
கைதடி வடக்கு,
கைதடி.

[4173]

### திருமதி தைரியலக்ஷ்மி குமாரசுவாமி

இலக்கம் 10, செட்டித்தெரு நல்லூரைச் சேர்ந்த திருமதி கு. தைரியலக்ஷ்மி நேற்று [29-8-91] கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற குமாரசுவாமி [முன்னாள் அதிபர் யா/இந்துக் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும்' மீனா, புவனம், ஞானம், சாந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற Dr, குமாரன்ரட்ணம், பேராசிரியர் செல்வநாயகம், மங்களமுனசிங்கா, Dr. நடராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜி, சரேன், சனத், அபந்தி, விஸ்வ அஜித், வினோத், வசந், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
திருமதி பு. செல்வநாயகம்

இல-5, செட்டித்தெரு, நல்லூர்
யாழ்ப்பாணம்,

[17982]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org